காலமாக அதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து அதிகபட்சமாக துணை மின் நிலையங்களை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு எல்லாப் பகுதிகளிலேயும் மின் அழுத்தத்தைச் சீர் செய்வதற்காகத்தான் ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி, 100 துணை மின்நிலையங்களை அமைக்க வேண்டுமென்று தெரிவித்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே நம்முடைய தமிழ்நாடு மின்சார வாரியம் இதற்கான கணக்குகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. எந்த எந்தப் பகுதிகளில் துணை மின்நிலையங்களை அமைக்கலாம், எங்கெங்கு குறைந்த மின் அழுத்தம் இருக்கிறது என்பதையெல்லாம் கண்டுகொள்வதற்கான ஆய்வு செய்யும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, அதற்காக இறுதிப் பட்டியலையும் அவர்கள் தயாரித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பகுதியிலே, இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்குமானால், அதிகாரிகளோடு கலந்து ஆலோசித்து, அந்தப் பகுதிகளில் தேவையான நிலம் இருக்குமானால், அதையும் அக்வையர் செய்து, அந்தப் பகுதிகளிலே துணை மின் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 510, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

510—

செங்கம் நகரில் சிறுதொழில் பெருக நடவடிக்கை

* **44553**—*டாக்டர் பெ. வீரபாண்டியன்:*

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் நகரில் சிறுதொழில் பெருக சிட்கோ மூலம் உள்ளமைப்பு ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இவ்வினா எழவில்லை.

TRUTH ALONE TRIUMPHS

டாக்டர் பெ. வீரபாண்டியன்: பேரவைத் தலைவர் அவர்களே, சிட்கோ மூலமாகவாவது அல்லது எந்தத் தொழில் துறை மூலமாகவாவது தொழில் தொடங்க வேண்டுமென்றால், தொழில் முனைவோர்களுக்கு முதலில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். அவர்களுக்கு அடிப்படைத் தேவைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அவர்களைக் கவர நாம் முன்வர வேண்டும். அப்போதுதான் அவர்கள் குறிப்பிட்ட இடத்திலே தொழில் தொடங்க முன்வருவார்கள். குறிப்பாக செங்கம் ஒன்றியத்தில் பொன்னி ஆற்றின் கரையில் அமைந்துள்ள நீப்பத்துறையில் புறம்போக்கு நிலம் இருக்கிறது. அங்கே சிட்கோ மூலமாகச் சிறுதொழில் அமைக்கலாம். புதுப்பாளையம் ஒன்றியத்தில் அமைந்துள்ள செய்யாற்றங் கரையில் அமைந்துள்ள காஞ்சி கிராமம் இருக்கிறது. புறம்போக்கு நிலம் உள்ளது. செங்கம் நகரின் செய்யாற்றின் ஆற்றங்கரையிலேகூட புறம்போக்கு நிலம் இருக்கிறது. தண்ணீர் வசதி, மற்ற வசதிகள் எல்லாம் இருக்கின்றன. தொழில் முனைவோர்களைக் கவர வேண்டுமென்றால் ஒரு பாதுகாப்பான இடம், மின்சார வசதி, காம்பவுண்டு சுவர் இவைகளை ஏற்படுத்திக் கொடுத்தால்தான் தொழில்முனைவோர்கள் அங்கே வந்து தொழில் செய்வார்கள். அதை முதலில் ஏற்படுத்திக் கொடுத்தால்தான் தொழில் முனைவோர்களைக் கவர வாய்ப்பு ஏற்படும். அந்தமாதிரி அடிப்படை வசதி ஏற்பாடு செய்ய வேண்டும். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையைப் பொறுத்தவரையில் தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டம் என்ற அடிப்படையிலேதான் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் திருவண்ணாமலைக்குப் பல தனித் திட்டங்களை அறிவித்துள்ளார்கள், அந்த அடிப்படையிலே எல்லாத் தொழில் துறைகளுக்கு ஒரு உத்திரவிட்டிருக்கிறார்கள். சிட்கோவும் திருவண்ணாமலை மாவட்டத்தில் பல்வேறு தாலுக்காக்களில் அரசாங்க இடம் வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். தேவையான இடம், எங்கெங்கு கிடைக்கின்றதோ, அங்கெல்லாம் தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்க முன்வருவார்களானால் அங்கெல்லாம் இத்திட்டம் விரிவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-10

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதியிலே ஜூஸ் தொழிற்சாலை மற்றும் ஜாம்

தொழிற்சாலை ஏற்படுத்த இடத்தைத் தேர்வு செய்து இருக்கிறார்கள். திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திற்குப் பக்கத்தில் சேலம் இருக்கிறது. கொல்லிமலை, ஏற்காடு போன்ற பகுதிகள் உள்ளன. பெரும்பாலும், கொல்லிமலையிலே விவசாயத் துறை மூலமாகவும் சரி, தனியாரானாலும் சரி, வனத்துறையின் மூலமாகவும் சரி அன்னாசிப்பழம் அங்கு அதிகமாகப் பயிரிடுகிறார்கள். அதேபோன்று பக்கத்திலே இருக்கும் தர்மபுரி மாவட்டத்திலும் மாம்பழத்தை அதிக அளவில் பயிரிடுகிறார்கள். எனவே, செங்கம் தொகுதியில் நீப்பத்துறை, காஞ்சி ஆகிய இடங்களில் ஒரு ஜூஸ் தொழிற்சாலை மற்றும் ஜாம் தொழிற்சாலை ஏற்படுத்திக் கொடுக்க சிட்கோ மூலம் அமைச்சர் ஆவன செய்வார்களா என்பதைக் கேட்க விழைகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிட்கோ மூலமாக நாம் எந்தத் தொழிலையும் ஆரம்பிப்பது இல்லை. தொழில் முனைவோர்கள் முன் வந்தார்களேயானால் எல்லா வசதிகளையும், எல்லா உதவிகளையும், ஊக்கத்தையும் அரசு கொடுக்கத் தயாராக இருக்கிறது. அந்த அடிப்படையிலே செங்கத்தைச் சேர்ந்த 25 தொழில் முனைவோர்கள் முன் வருவார்களேயானால் அந்த பகுதியிலும் சிட்கோ தனது தொழில்பேட்டையை விரிவாக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கி. தருமலிங்கம்.

திரு. கி. தருமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் ஜவ்வாது மலை இருக்கிறது. மலைக்குப் பக்கத்திலே செங்கம், அணைக்கட்டு, போளூர் மற்றும் திருப்பத்தூர் ஆகிய தொகுதிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் மலைவாழ் மக்கள் நிரம்ப இருக்கிறார்கள். அவர்கள் பொருளாதாரத்திலே மிகவும் பின்தங்கியவர்கள். அந்த மலைப் பகுதிகளிலே புளி, புங்கன், கடுக்காய் மற்றும் நெல்லிக்காய் போன்றவை அங்கே அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. புளியை பவுடராகச் செய்து, பாக்கெட்டில் போட்டு வெளி நாடுகளுக்கு அனுப்புவதாகத் தெரிய வருகிறது. அதே போன்று கடுக்காயை பவுடராகச் செய்து அனுப்புகிறார்கள். ஆகவே, அங்குள்ள மலைவாழ் மக்கள் இத்தகைய பவுடர் ஆக்குகின்ற சிறுதொழிலைச் செய்ய சிட்கோ மூலமாக 25 நபர்களைத் தேர்வு செய்ய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற மலைவாழ் மக்களுக்குப் பயிற்சியைக் கொடுத்து அங்கே தொழில் துவங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு சிட்கோ மூலமாக உதவி செய்வது என்பது இயலாதது. இது சிட்கோ சம்பந்தப்பட்ட கேள்வி. இருந்தாலும் முக்கியத் துனைக் கேள்வியாக இருக்கிற காரணத்தினாலே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினரே பொறுப்பேற்று கூட்டுறவு தொழில் முனைவர்கள் சங்கம் என்கிற அடிப்படையிலே அவர்கள் அமைத்துக் கொடுப்பார்களேயானால் அந்தக் கூட்டுறவு தொழில் முனைவர்கள் சங்கத்தின் மூலமாக எல்லா உதவிகளையும் அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 511, திரு. கே. முனிவெங்கடப்பன் இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. வி. கே. சின்னசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

511—

போச்சம்பள்ளியில் சூரியகாந்தி எண்ணெயை டின்களில் நிரப்புதல்

*** 36330** - *திரு. கே. முனிவெங்கடப்பன்:*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், போச்சம்பள்ளியில் உற்பத்தி செய்யப்படும் சூரியகாந்தி எண்ணையை சென்னையில் டின்களில் நிரப்புவதற்குப் பதிலாக போச்சம்பள்ளியிலேயே நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்

(ஆ) 9-12-94 முதல் போச்சம்பள்ளியிலேயே சூரியகாந்தி எண்ணெய் டின்களில் நிரப்பப்படுகிறது.

முற்பகல் 10-15

திரு. வி. கே. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று தமிழ்நாட்டிலே எத்தனை இடங்களிலே சூரியகாந்தி எண்ணெய்